*This question paper contains 2 printed pages.* **Your Roll No. ..........................**

| | | |
|---|---|---|
| *Sl. No. of Ques. Paper* | **: 5140** | **G** |
| *Unique Paper Code* | **: 208161** | |
| *Name of Paper* | **: Functional Grammar and Skills of Language** | |
| *Name of Course* | **: B.A. (Prog.) Tamil – A** | |
| *Semester* | **: I** | |
| *Duration :* | **: 3 hours** | |
| *Maximum Marks* | **: 75** | |

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

I. எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக. 7.5 x 2=15

1. மொழிக்கு இடையில் வரும் எழுத்துகளை விவரிக்க.

2. சார்பெழுத்துகள் என்றால் என்ன? விவரிக்க.

3. மெய்யெழுத்துகளைச் சான்று தந்து விவரிக்க.

4. உயிர்மெய் எழுத்துகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

5. குற்றியலுகரம், ஆய்தக்குறுக்கம்- இவற்றை விளக்குக.

II. எவையேனும் இரு வினாக்களுக்கு விடைதருக. 5 x 2=10

1. பெயர்ச் சொல்லைச் சான்று தந்து விவரிக்க.

2. வினைச்சொல் என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக.

3. இயற்சொல் என்றால் என்ன? விவரிக்க.

4. திசைச்சொல் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

II. எவையேனும் இரு வினாக்களுக்கு விடைதருக. 5 x 2=10

1. வாக்கியம் என்றால் என்ன? விளக்குக.

2. கூட்டு வாக்கியம் என்றால் என்ன? சான்றுகளுடன் விவரிக்க.

3. வல்லினம் மிகா இடங்களைச் சான்று தந்து விளக்குக.

4. தன்வினை பிறவினை என்றால் என்ன? விவரிக்க.

IV. கடிதத்தின் அமைப்பை விவரிக்க. 10

(அல்லது)

நீவிர் கொடைக்கானல் வருவதைத் தெரிவித்து அங்கிருக்கும் உமது நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

*Turn over*

V. உரையாடல் என்றால் என்ன? அதன் உத்தி குறித்து விவரிக்க. 10

(அல்லது)

அலுவலகம் ஒன்றில் உதவி கேட்கும் விதத்தில் அமைந்த ஓர் உரையாடலை எழுதுக.

VI. பத்தி என்றால் என்ன? அதன் அமைப்பை விவரிக்க. 10

(அல்லது)

'தமிழகத்தில் மது விலக்கு கோரிக்கை' குறித்து ஒரு பத்தி வரைக.

VII. கீழ் வரும் பத்தியைச் சுருக்கி வரைக: 10

சீக்கியர்கள் தலைப்பாகை அணிவது அவர்களது மத அடையாளச் சின்னமாக அமைகிறது. வட இந்தியாவில் கோடைக்கால வெப்பமும் குளிர்காலக் குளிரும் மிக அதிகமாக இருக்கும். அவற்றைத் தாங்கிக்கொள்ள முடியாமல் மக்கள் இறந்து போவதும் உண்டு. அதனைக் கருத்தில் கொண்டு இத்துன்பங்களிலிருந்து மக்கள் அர்களைப் பாதுகாத்துக்கொள்ள தலையில் தலையங்கி அணிய வேண்டும் என்று சீக்கியர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. சீக்கியர்களின் இத்தகைய மத அடையாளங்களுக்கு ஒரு வரலாற்றுச் செய்தியும் உண்டு. 'ஔரங்கசீப் என்னும் முகமதிய மன்னனை எதிர்த்து நின்ற சீக்கியர்களின் பத்தாவது குரு கோவிந்த் சிங் தன் சீடர்களுக்குச் சில சின்னங்களையும் சம்பிரதாயங்களையும் வகுத்து வைத்தார். ஒவ்வொரு சீடரும் தலைமயிரைப் பிறந்த மேனிக்கே வளர்த்து வரவேண்டும். தலைமயிர் வளர்ப்பதால் அதனைச் சிக்குப் பிடிக்காமல் வைத்திருக்க ஒரு சீப்பைத் தலையிலே தரிக்க வேண்டும். கச்சை அதாவது உள்ளே போடும் காற்சட்டை தரிக்க வேண்டும். பாரத பூமியைக் காக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று காட்டுவதற்குக் கையில் ஓர் இரும்பு வளையம் அணிய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு வாள் எப்போதும் வைத்திருக்க வேண்டும். இது பஞ்சாபி மொழியில் கேசம், கங்கம், கச்சம், கடா, கிருபாணம் எனப்படும். இவை யாவும் ககரத்தில் தொடங்குவதால் பஞ்ச ககாரங்கள் எனப்படுகின்றன. இந்த முறையைப் பிற்காலத்தில் சீக்கிய மக்கள் அனைவரும் தம் மத அடையாளமாகக் கொண்டு கடைப்பிடித்தனர். சீக்கியர்கள் தலைமயிரை வளர்த்து அதைத் தலையின் மேலே கொண்டை போட்டு, அதற்குப் பின்னரே தலைப்பாகை அணிவதைக் காணமுடியும். இக்கொண்டை திருமாலின் சக்கரமாகக் கருதப்படுகிறது.



100